தென்னகம்

ஆசிரியர்: K.A. மதியழகன்

மலர் – 1 | 6 – 11 – 59 வெள்ளி | இதழ் – 42

எங்கிருந்தோ வந்தான்! இதயந்தனில் இடம் கொண்டான்!

K.A. மதியழகன்

தலை தெறிக்க பள்ளியி லிருந்து ஓடி வந்தான் அந்தச் சிறுவன். மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது.

“என்னடா இது! மெதுவாக வரக்கூடாது. பள்ளிக்கூட மணிகூட அடிக்கவில்லை. அப்படி என்ன தலைபோகிற காரியம்” – தாயார் கூறினார்கள்.

“அம்மா! அம்மா!” என்று கதறிவிட்டு விக்கி விக்கி அழுதான்.

“அம்மா! அண்ணாவை கைது செய்து விட்டார்கள். போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள்”

“அய்யோ! அலக்சாண்டரையா! கைதா செய்து விட்டார்கள். அப்படி என்னடா தப்பிதம் செய்தான்?” அன்னையின் வாயிலிருந்து இந்த சொற்கள் வெளிப்பட்டன. அவள் தவிப்பு புரிந்தது.

“சார்மன்னனை கொலை செய்வதற்கு சதி செய்ததாக அண்ணன் மீது குற்றச்சாட்டு”

‘உனக்கு எப்படி தெரியும்?’

“பக்கத்து வீட்டுப் பெண், என்னை வகுப்பறையிலிருந்து ...ந்தாள். தம்பி! கடிதம் ...யா? என் தந்தையின் ... பீட்டர்ஸ்பர்க் நகரில் இருப்பவர். தீட்டிய லிகிதம் இது! இப்போதுதான் வந்தது என்று என்னிடம் நீட்டினாள் இதிலே உள்ளதம்மா, இந்த பேரிடி;”

பிள்ளைமீது கொலைக்குற்றம்! எங்கோ தொலைதூரத்தில் உள்ள நகரத்தின் காராக்கிருகத்தில் தனயன். எந்த அன்னை சகிப்பாள்?

‘அடுத்த ரயில் எப்போது?’ என்றாள். மகனைச் சந்திக்க கண்ணீரும் கம்பலையுமாகக் கிளம்பினாள்.

சிம்பிர்ஸ்கில் உலியனாவ் குடும்பம் என்றால் பெரும் கௌரவம் இருந்தது. மேரியா அலக்சாண்பரோவ்னா – ஆம்! அதுதான் அந்த அன்னையின் பெயர்–அவளின் கணவர் மாநிலத்திற்கே பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் வேலைபார்த்து முந்தின ஆண்டுதான் கண்ணை மூடினார். அவளின் ஆறு குழந்தைகளில் மூத்தவன் தான் அலக்சாண்டர்! அவன் தூக்கு மேடைக்கும், சிறைச்சாலைக்கும் மத்தியில்!

சாதாரண நாட்களில் அவளைச் சுற்றி ஊரும் உறவும் ஒட்டிக் கொண்டிருக்கும். அடுத்ததெரு போகிறாள் என்றால்கூட நாலுபேர் பின் தொடருவார்கள். அவள் வாழ்விலேயேநெருக்கடியான கட்டம். ஆறுதல் மொழிகூற ஒருவரையும் காணோம். மன்னனையே கொலை செய்ய முயன்ற பிள்ளையின் தாயாருடன் யார் உடன் வருவார்கள்? சுற்றமும் நட்பும் ஊமையாயினர். தன்னந் தனியாக ரயிலில் நகரை நோக்கிக் கிளம்பினாள்.

வழி முழுதும் எண்ண அலைகளால் அலைக்கழிக்கப்பட்டாள். இருபத்தொரு வயது கூட முடியவில்லை அலக்சாண்டருக்கு. பால்வடியும் வதனம். கனிவான பண்பு. ஆனால் அவனது உள்ளத்தின் அடித்தளத்தில் ஏதோ ஒரு பெரும் போராட்டம் நடைபெறுகிறதுஎன்பதைபெற்ற தாய் உணர்ந்திருந்தாள். ஒரு ஆண்டிற்குமுன் திடீரென்று சமய லறையிலிருந்த அம்மாவிடம் அலக்சாண்டர் வந்தான், “அம்மா! வியாதிக்கு மருந்து தெரியாத வழிப்போக்கர்களெல்லாம் நோயைக் குணப்படுத்துகிறேன் என்று சொன்னால் எவ்வளவு போக்கிரித்தனம், அயோக்கியத்தனம். அதுபோலத்தான் புரையோடிக் கொண்டுள்ள சமுதாயப் புற்று நோயையும், மூல காரணத்தைக் கண்டுபிடிக்காமல் குணப்படுத்த முடியாது” என்றான்.

“உனக்கேனடா இந்த ஊர்வம்பு! நீ டாக்டராகப் போகிறாய்! உனது பாடத்தில் கவனம் செலுத்து. உன்

(6–ம் பக்கம் பார்க்க)



லெனின்

வாழ்வும் வழியும்

இலக்கியச் சந்தையிலே

"விஷ விருட்சம் !"

ஆசிரியர்: பங்கிம்சந்திரர் 19–ம் நூற்றுண்டில் வங்கத்தில் தோன்றியதலைசிறந்தஎழுத்தாளர். அவரது எழுத்துக்கள் புதியதோர் உத்வேகத்தையே வங்க மக்களின் மத்தியில் உருவாக்கியது; சரித்திரநிகழ்ச்சிகளைப்பின்னணியாகக் கொண்டு பல நாவல்கள் தீட்டியுள்ளார். தமது இளம் வயதிலேயே 'துர்க்கேசநந்தினி' என்ற நவீனத்தை எழுதி, பலரின் கவனத்தை ஈர்த்தார். சமூகப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு பல சமூக நாவல்களும் எழுதியுள்ளார். பண்பட்ட எழுத்தாளர்களின் ஏடுகள் ஏதாவதொரு புதிய,நல்லமாற்றங்களை உருவாக்கி வருவது இயல்பு; எண்ணற்ற புதிய சிந்தனைகளையும் சிந்திச் செல்வது வழக்கம்– 'விஷவிருட்சம்' என்றபங்கிம் சந்திரரின் நவீனமும் மனித சமுதாயத்தின் அன்றுடவாழ்வை எதிர்நோக்கியுள்ள பல அடிப்படைப் பிரச்சனைகளைப் பரிசீலனை செய்கிறது.

தீய செயல்களுக்கு தீய விளைவுகள்தான் உருவாகும் என தீட்டுவது மனித இயலை அறிந்த பேனு வீரர்களின் அநுபவம்.

தீய செயல்கள் அனைத்தும் கவர்ச்சிகரமானவை. எளிதில் சலனமுள்ள நெஞ்சங்களை தன்பால் ஈர்த்துவிடும்; கோபம், வெருப்பு, காமம் போன்றவைகள் மனிதகுலத்தில் காணும் தீய குணங்கள் – அவைகளை விஷ விருட்சங்களாக ஆசிரியர் காட்டுகிருர். நம்மை யறியாமலேயே இவைகள் மெல்ல மெல்ல புகுந்து விடும். பிறகு அது விஷக் கனிகளைத்தான் விளைவுகளாக அளிக்கும்.

தீய செயல்களைச் செய்த மனிதன் அதன் கசப்பான விளைவுகளின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளமுடியாது. இதுதான் மனித குலத்தின் மாருத அநுபவம்–வினை விதைத்தவன் தினை யறுக்க முடியுமா? இதுதான் இந்நவீனத்தின் அடிப்படைக்கருத்தாக அமைந்துள்ளது.

தீயகுணங்கள் நம்மைநாடாமல் பாதுகாக்க வழிவகைகளையும் ஆசிரியர் காட்டுகிருர் – மனவலிவுஎன்றபண்பினுல் அதனைக் காக்கமுடியும். தொடர்ந்த பயிற்சியினுலும், ஆழ்ந்த கல்வி அறிவினுலும் மனவலிவைப் பெறமுடியும். வேறு பல நலன்களை வாழ்க்கையில் பெற்றிருந்தும், மனவலிவு எனும்குணம் பெருத காரணத்தால், இழிவும், பழியும் பலரின் வாழ்வில் சூழ்ந்து விடுகிறது. மோகம் எனும் தீயகுணச் சேர்க்கையினுல் சமுதாயத்தின் கண்களில் குறைத்து மதிப்பிடும் பரிதாப நிகழ்ச்சிகளை அன்றுடம் காண்கிருேம் – பசித்தவனுக்கு உணவு தேவைப் படுவதுபோல மோகவெறி கொண்டவனுக்கு, அவனதுசதைப்பசியினைப்போக்க அழகிய மங்கையர்கள் தேவைப் படுகின்றனர். உள்ளத்தில் தோன்றிய இச்சைகளை நிறைவேற்ற முயலும்போது பழி, பகை, அச்சம் போன்றவைகள் தொடர்கின்றன. அவன் ஈடுபடுகின்ற செயல்களின் தவிர்க்க முடியாத இயல்புகள் இவைகள். சராசரி மனிதர்களின் இதயங்களில் நடமாடும் கருத்துக்களை மையமாகக் கொண்டு, சிக்கல்களையும், மனதில் தோன்றும் மயக்கங்களையும் எடுத்துக்கர்ட்டி, சிக்கல்களுக்குப் பரிகாரத்தையும் தீட்டி இந்நவீனத்தை ஒப்பற்ற காவியமாக பங்கிம் சந்திரர் உருவாக்கியிருக்கிருர்.

நாகேந்திரன்எல்லா நலன்களையும் தனது வாழ்வில் பெற்றவன். ஊரில் கௌரவத்தையும், வெளியில் புகழையும் கொண்டவன் தான். மோகத்திற்கு பலியானுன். அச்செயல் அவனது வாழ்வில் மாருத பழியினைச் சேர்த்து விட்டது. குந்தநந்தினியின் மயக்கும் விழிகளும் அங்க அமைப்புகளும், ஏதோ இனத் தெரியாத :ஒருவகையான மயக்கத்தை அவனது நெஞ்சில் தூவி விட்டது. அதன் கொடிய பிடியிலிருந்துநீங்கும் மனவலிவு அவனுக்கு .இல்லை. காரணம் மனவலி பெறுமளவு அவனது இளமை அமையவில்லை. எல்லா வகையான பேறுகளையும இளமையில் பெற்றிருந்ததால் இது போன்றசோதனைக் கட்டங்கள் ஏற்ப்பட்ட போது அவனுல் சமாளிக்க முடியவில்லை.

அவனுக்குக் கிடைத்த மனைவியோபெறற்கரிய பாவை. மாதர் குலத்திற்கோர் அணிகலன். அதனை நாகேந்திரன் தனது நண்பனுக்கு தீட்டிய மடலில் அழகு படக்கூறுகிருர். "மாணிக்கங்கள் கிடைக்குமென்றுதான் எல்லோரும் சுரங்கத்தைத் தோண்டுகிருர்கள். ஆனுல், சிலருக்குத்தான் அந்தப்பேறு கிடைக்கிறது. எனக்கும் ஒரு மாணிக்கம் கிடைத்தது. அதனை எனது தூய்மையற்ற செயலால் இழந்து தவிக்கிறேன்" என்று வேதனை வாட்ட இதயத்தைக் காட்டுகிருர். நாகேந்திரன் நமது அநுதாபத்திற்குரியவன். மோகவெறியில் வழக்கமாகப் பலர் செய்வதுபோலத்தான் அவன் செயலும் அமைந்துவிட்டன. பண்புள்ளவன். எனவே தனது கடந்த கால போற்ரு ஒழுக்கத்திற்காக கண்ணீர் வடித்தான். அதுவே அவனுக்கு கிடைத்த தண்டனை. தினைத்துணை அளவு பழிவந்தாலும், பனையாகக்கருதுவார்களாம் பயன் தெரிவர். மனைவியின் வெளியேற்றம் அவனது கண்களைத் திறக்க வைத்தன. புயல் அவன் வாழ்வில்புகுந்துவிட்டது. அமைதி குலைந்தது. அவன் செயலுக்கேற்ப விளைவுகளையும் வாழ்வின் இறுதியில் அநுபவித்து விட்டான்.

சூர்யமுகி – நாகேந்திரனின் இல்லத்தில் ஒளியேற்றிய மனை விளக்கு, சீரிய பண்புகளின் உறைவிடம் – பொறையின் நிலைக்களன். அவளின் தியாகத்தால் நமது நெஞ்சில் மாருத இடத்தைப் பிடித்துக்கொண்டாள். கணவனின் போற்ரு ஒழுக்கத்தை துவக்கத்திலேயே புரிந்துகொண்டாள். பொறுமையினையோ, கடமையுணர்ச்சியினையோ, ஆத்திரத்தின் விளைவாக இழக்கவில்லை. சகோதரியின் வீட்டிலிருந்து நாகேந்திரன் ஒருமுறை குந்தநந்தினியின் இளமையைப் பாராட்டி சூர்யமுகிக்கு மடல்ஒன்று எழுதினுன். அப்போது முதலே தனது கணவன் மோகத்தால் ஈர்க்கப்படுகிருன் என்பதனை உணர்ந்தாள். 'பிஞ்சிலே எதுவும் சுவையாகத் தானிருக்கும். இளநீர்கூட பிஞ்சில் சுவையாகத்தானிருக்கிறது ......' என்று சுட்டிக்காட்டினுள். குருடனுக்கு கிடைத்தகதிரொளி போல் மனைவியின் அறிவுரை வீணுயிற்று.பலவேளைகளில்அவனது தவருன செயல்கள் அவளை எரிமலையாக மாற்றியிருக்கிறது. என்றுலும் அவளின் இதயத்திலிருந்து அனற்கங்குகள் வீசவேயில்லை. எந்த நிலையிலும் மனம் குலையவேயில்லை. நிலைதடுமாறவேயில்லை.

குந்த நந்தினி – பரிதாபத்திற்குரியவள். நாகேந்திரனிடம் மனம் சென்றது. அவனிடம் மெல்ல மெல்ல பாசத்தை வளர்த்துக்கொண்டாள். அவளின்வாழ்க்கையில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டன எதுவும் நாகேந்திரன்மீது கொண்டவிருப்பத்தைஇதயத்திலிருந்து அகற்ற முடியவில்லை. விதவையான பின்பும்வேட்கைதணியவில்லைமாருத நினைவாகவே இருந்தாள் தனது செயலால் அமைதியான குடும்பத்தில் புயல் புகுமே என அவளின் மோகமனம் கணநேரம் கூட எண்ணவில்லை. மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என எண்ணினுள் – சபல நெஞ்சம் கொண்ட நாகேந்திரனும் அவளின் விருப்பத்திற்கு இணங்கினுன். எண்ணியது நடந்தது. ஆனுல் அதனைத் தொடர்ந்து நடந்தகாரியங்கள் அவளைநடைப்பிணமாக மாற்றின. மனம் விரும்பிய இன்பம் கிடைக்கவில்லை. நாகேந்திரன் அவளை விட்டு நெடுந்தூரம் சென்று விடடான், அவளின் திருமணம் பலரின் வாழ்க்கையிலும் எண்ணற்ற மாறுதல்களை உருவாக்கி விட்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வங்க மக்களின் வாழ்வில் எதிர்நோக்கியிருந்த பல சிக்கல்களையும் மிக அழகுபட பங்கிம் சந்திரர் இந் நவீனத்தின்மூலம் எடுத்துக் காட்டுகிருர், மறுமணம் பற்றியும், இருதாரம் பற்றியும் விளக்குவது மிகக்கவர்ச்சிகரமாகவும், அதே வேளையில் அப் பிரச்சனையின்பால் நமது கவனத்தையும் ஈர்க்கிறது. சிந்திக்க தூண்டுகோலாகவும் அமைகிறது.

மொத்தத்தில் இந் நவீனம் 19–ம் நூற்றுண்டில் வாழ்ந்த வங்க மக்களின் உள்ளங்களைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணுடியாகும் !

– மேகவண்ணன்.

தலைமைக்கு[illegible] அறிக்கை 4-59.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

சிதம்பரம்

★

மாணவக் கழகங்களை அமைப்பதற்கும், மாணவர்க்கழகங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மாவட்டவாரியாக கீழ்கண்டத்தோழர்கள் அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணியினை அன்போடு மேற்கொண்டு செம்மையாக செய்து வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாவட்டம் :
என். வி. என். சோமு,
ஈ. கிருஷ்ணன்,
எஸ். ஆர். பாலசுப்ரமணியம், பி. ஏ. (ஆனர்ஸ்)
வ. செல்வராசன்.

செங்கல்பட்டு மாவட்டம் :
பி. பாலசுப்ரமணியம், பி. ஏ.
சி. என். ஏ. பரிமளம்.

தென்னுற்காடு மாவட்டம் :
இராசகுமார் பீட்டர். பி. எ. [ஆனர்ஸ்]
பூவை. நா. இராமாநுசம், பி. காம் [ஆனர்ஸ்]
வி. வி. அறிவுடைநம்பி.

பெங்களூர் :
கோ. இராமன்

தஞ்சை மாவட்டம் :
சீர்காழி சோமசுந்தரம், பி. ஏ.
பி. வி. செழியன், பி. எ. ஆனர்ஸ்
இரா. இராமசாமி
கரந்தை கணேசன்

மதுரை மாவட்டம் :
ப. நெடுமாறன், பி.ஏ.[ஆனர்ஸ்]
இந்திரசித், பி. எ.

கோவை மாவட்டம் :
சு. ஆறுமுகம், பீ.ஏ.(பீ.எல்.)
துணைத்தலைவர் கோவைநகரசபை
கே. ஏ. கிருட்டிணசாமி, பி. ஏ. (ஆனர்ஸ்)

சேலம் மாவட்டம் :
இரா, வெங்கிடேசன், பி. ஏ. (ஆனர்ஸ்)
வ, தென்னவன்

மற்ற மாவட்டங்களின் அமைப்பாளர்களை அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

அன்பன்,
எஸ். டி. சோமசுந்தரம்
பொதுச் செயலாளர், தி. மா. மு. க

"எழிலகம்"
சிதம்பரம்,
26-10-'59



மலர் 1] [இதழ் 42

உணவுப்பொருளின் விலை !

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தனிப்பட்ட பிரமுகர்கள் ஒன்றுகூடி கடந்த 1-11-59 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் சர்வகட்சி விலைவாசிக் குறைப்புக் கமிட்டி ஒன்றை நிறுவியுள்ளார்கள். இந்தக் குழுவில் ஆளும் கட்சியைத் தவிர மற்ற எதிர்க்கட்சிகள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன. நாள்தோறும் விஷம் போல் ஏறிவரும் உணவுப் பொருள்கள், மற்றும் உபயோகிக்கும் பண்டங்களின் விலைவாசிகளை எதிர்த்து, தக்க நடவடிக்கை எடுப்பதே இக் குழுவின் வேலைத்திட்டம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

நல்ல முயற்சி – நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் ஒவ்வொரு கோணத்தில் நின்று சர்க்காரின் உணவுக்கொள்கையை இதுவரை விமர்சித்து வந்தார்கள். உணவுப் பிரச்சனை என்பது தனிப்பட்ட கட்சியின் பிரச்சனை அல்ல. கட்சிகளின் தனிப்பட்ட முயற்சிகளால் மட்டும் நெருக்கடிகளுக்கு தீர்வுகாண முடியாது. இதுவோர் வாழ்வுப்பிரச்சனை. குறிப்பாக தொழிலாளர்கள், பாட்டாளிகள், நடுத்தர மக்கள் ஆகிய உழைக்கும் மக்களின் நல்வாழ்வை தங்களின் வேலைத் திட்டமாக அமைத்துக்கொண்டுள்ள அரசியல் கட்சிகள் உடனடியாக கவனிக்க வேண்டிய உயிர்ப் பிரச்சனை. அரசியல் பலாபலன்களை எதிர்பாராமல் விலைவாசிகுறைப்பு முயற்சியில் சகல கட்சிகளும் ஈடுபட வேண்டும்.

சென்ற திங்கள் சென்னையில் நடந்த கழக மாநாட்டில் உணவுப் பிரச்சனைப்பற்றி விவாதிக்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சியின் அலட்சியப் போக்கிற்கு கண்டனம் தெரிவித்தும், போக்கு நீடிக்குமானால் தக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுச் செயலாளரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னையில் அமைக்கப்பட்டுள்ள சர்வகட்சி விலைவாசி குறைப்புக் கமிட்டியிலும் கழகம் அங்கம் வகிக்கிறது. அக் குழுவில் கழகத்தின் சார்பில் பொதுச் செயலாளர், துணைப்பொதுச் செயலாளர் ஆகியோரும், தோழர் ஈ. வெ. கி. சம்பத், எம். பி. அவர்களும் உறுப்பினர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வு சமுதாயத்தின் மேல் தட்டிலுள்ள மக்களை அவ்வளவாக பாதிப்பதில்லை. உழைக்கும் கூட்டத்தைத்தான் அது வெகுவாகத் தாக்குகிறது. நாள்தோறும் வளர்ந்துவரும் வாழ்க்கைச் செலவுப் புள்ளிகளை கூர்ந்து நோக்கினாலே இந்த உண்மை எளிதில் புலப்படும். நடுத்தர விவசாயிகள், ஏழை உழவர்கள் ஆகியோர் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து உலகுக்கு அளிக்கும் அவர்கள்கூட, இந்த நெருக்கடியில் தாக்கப்படுகிறார்கள். காரணம் அவர்கள் உற்பத்திச் செய்யும் உணவுப் பொருள்கள் அவர்களின் உடமையல்ல, அதன் உரிமை மற்றவர்களின் கரத்தில் சிக்கியிருப்பதால், ஊழிகாலமும் அவதிப்படுவோராகவே காட்சியளிக்க வேண்டியுள்ளது. நகர்ப்புறத்தில் வாழும் ஆலைத் தொழிலாளர்கள், சர்க்கார் சிப்பந்திகள் போன்றோரின் நிலையோ இன்னும் வேதனை தரத் தக்கது, உலகப்போருக்குப்பின் பொருள்களின் விலைகளோ பலமடங்கு வளர்ந்துவிட்டது. அதனை ஈடுசெய்யும் வகையில் அவர்களின் அடிப்படை ஊதியம் வளரவில்லை. ஏற்கனவே தாங்க முடியாத சுமையினை வைத்திருக்கிறார்கள். இன்றைய உணவுப் பொருள்கள் மற்ற பொருள்களின் விலைவாசி ஏற்றம் ஆகியவைகள், மேலும் அவர்களின்மேல் கல்லை தலையில் சுமத்தி, ஆழ்கடலுககுள் தள்ளுவது போன்ற இக்கட்டான நிலைமைக்கு துரத்துகிறது. மருமகள் மாமியாள் ஆவதுபோல குறைகூறிய குணாளர்களே கோலேந்திய சம்பவம் நமது தலைமுறையில் நடந்தது. ஆனால் மணிமுடிகள்தான் மாறியிருக்கின்றன. சிம்மாதனத்தில் அமர்ந்திருப்போரின், மனம்மட்டும் மாறவில்லை என்பதைதான் நடைபெறும் சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

உணவுப் பொருள்களின் விலை உயர்விற்கு அமைச்சர்கள் நேரத்திற்கொரு விளக்கங்களைக் கொடுக்கின்றனர்; மத்திய அமைச்சர்களின் விளக்கங்களுக்கும், மாநில சர்க்கார்களின் அமைச்சர்களின் விளக்கங்களுக்கும் துளியெனும் தொடர்பிருப்பதில்லை. முன்னுக்குப்பின் முரணாகவே பல நேரங்களில் அமைந்துள்ளன.

நமது மாநில உணவு அமைச்சர் பக்தவத்சலம் கூறுகிறார் கடந்த இரண்டு ஆண்டுகளாக உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்று. அதுமட்டுமல்ல சென்னை மாநிலம் பற்றாககுறை மாநிலம் அல்ல என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். ஆந்திரத்திலிருந்து இந்த ஆண்டு அதிக அளவு அரிசிகிடைத்திருக்கிறது. மேலும், பற்றாக்குறை மாநிலமான கேரளத்திற்கு அனுப்பிய அரிசியின் அளவும் குறைந்திருக்கிறது. இவ்வளவு சாதகமாக நிலை ஏற்பட்டும், விலைவாசிகள் குறையவில்லையே ஏன்? என்ன காரணம்?

சர்க்கார் வெளியிடும் அறிக்கைகளே நிலைமைகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. கடந்த 19-ம் தேதியன்று சென்னை சர்க்காரின் உணவு இலாகாவின் சார்பாகப் பத்திரிகையாளர்களைச் சந்தித்த ஆபீசர், குறுவை நெல் விலை தஞ்சை ஜில்லாவில் மூட்டைக்கு ரூ. 3 வரை உயர்ந்துவிட்டதாகக் கூறியுள்ளார். ஆனால் அமைச்சர் பக்தவத்சலமோ இந்த நிலைமைகளுக்கு உருவான பதிலை அளிக்க முயலாமல், மதுரைபோன்ற பலஊர்களில்பேசும்போது, அரிசிவிலை ஏறவில்லை, இறங்குமுகத்தில் உள்ளதுஎன்றுகூறி நமக்குகண் மூடிவித்தை காட்டுகிறார். நெருப்புக் கோழி எதிரிகளிடமிருந்து தப்ப, தனது முகத்தை மணலில் புதைத்து கொள்ளுமாம், முகத்தை மட்டும் மறைத்துக்கொண்டால் முழு உடலையும் மறைத்துககொண்டதாக அது எண்ணிக் கொள்ளும் என்று கதையில்படித்திருக்கிறோம். அந்த நிகழ்ச்சிதான் நமது நினைவிற்கு வருகிறது. நெருப்புக்கோழியின் செயலுக்கும்நாடாளும் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் திசைதிருப்பும் பேச்சிற்கும் வேறுபாடு இல்லை என்றே கருதுகிறோம்.

டில்லி சர்க்கார் உணவுமந்திரி சென்ற ஆண்டு 6 கோடியே 20 லட்சம் டன் உணவுப் பொருட்கள் உற்பத்தி என்றும் இந்த ஆண்டு 7 கோடியே 30 இலட்சம் டன் என்றும் அதிகப்படியாக 110 இலட்சம் டன் என்றும் ஒரு புறத்தில் கூறுகிறார். சென்னை மாநில உணவு அமைச்சரோ 3 லட்சத்திற்கு மேல் உணவு தான்யங்கள் சென்னை மாகாணத்தில் உற்பத்தி பெருகி இருப்பதாக மற்றோர்புறத்தில் கூறுவதையும் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல சுதந்திரம் பெற்ற பனிரெண்டு ஆண்டுகளில் 1436 கோடி ருபாய்க்கு வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

உணவு உற்பத்தி பெருகி யிருக்கிறது – வெளிநாடுகளினின்றும் பெருமளவில் உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்துள்ளோம். என்றாலும் நமது உணவுப் பிரச்சனைக்கு நல்ல முடிவு கண்டு, விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், இதற்கு யார் பொறுப்பு? என்ன பரிகாரம்?

விளை நிலங்கள் அனைத்தும் விரல்விட்டு எண்ணக் கூடிய வெகு சிலரிடத்தில் புதைந்து கிடக்கின்றன. உபரியாக அவர்களுக்குக் கிடைக்கும் தானியங்கள் அனைத்தையும் கொள்ளை இலாபம் பெறக்கருதி நிலப்பிரபுக்கள் அமைச்சரின் விளக்கத்தைக் கேட்டவுடன் பதுக்குகிறார்கள், அதனைத் தடுத்து நிறுத்தி சர்க்கார் தக்க நடவடிக்கைகள் எடுக்கத் தயங்குகின்றது. இது நாடறிந்த உண்மை. உணவுப்பொருள்களை பதுக்கும் நிலச்சுவான்தார்களுக்கு பெரும் வர்த்தகச் சூதாடிகளும் துணையாக அமைகிறார்கள் – அவர்களையும் தட்டிக்கேட்க அரசாங்கம் அஞ்சுகிறது. உழைக்கும் மக்களின் அல்லல்களைப்பற்றி அதற்கு கிஞ்சித்தும் அக்கரையில்லை: உடமையாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கவே அவர்களுக்குநேரமில்லை. மேட்டுக்குடியினர் அடிக்கும்கொள்ளைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதுதான் அவர்களின் இன்றைய வேலைத் திட்டம்.

பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்பாகள், அநுபவ மொழி இது. ஏழையின் உள்ளம் ஓர் எரிமலை அது வெடிக்கத்துவங்கினால் ஆணவமும் அலட்சியமும் தூள் தூளாக்கப்படும். அலட்சியத்தினாலோ, குறைத்து மதிப்பிடுவதினாலோ பிரச்சனை மடிந்துவிடாது. இதனை நாடாள்பவர்கள் உணர்ந்து ஆவன வேண்டும். குதிரை பறிபோவதற்கு முன்பு கொட்டகையின் வாயிலை மூடுவதுதான் புத்திசாலித்தனமான செயல்.



கார்த்திகை தீபம்!

4

ஓலையை வாங்கி சின்னமலை படுக்கையிலே போட்டான். தலையணைக்கு அருகே கிடந்தது. அதனை படிக்க வேண்டுமென்ற பரபரப்பே அவனுக்கு ஏற்படவில்லை. மூலையிலே குத்து விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. எண்ணெய் வற்றி விட்டதால் திரிகருகும் சப்தம் கேட்டது. மேலப் பாளையம் குடும்பத்தின் நிலையும் இப்படி அணையும் தீபமாக மாறி விடுமோ என்ற பீதி அவனைப் பிடித்துக் கொண்டது.

அண்ணன்தம்பிகள் ஐவரென்றாலும் தம்பிமார்கள் இருவரும் சின்னமலையிடம் உயிரையே வைத்திருந்தனர். குழந்தைசாமியும் குட்டிசாமியும் தோட்டம் துரவுகளை கவனித்ததால் மாடு கன்றுகள் சரியாக உள்ளதா, வேளாண்மையில் என்ன மிச்சம் என்ற கணக்குப்பார்ப்பதிலேயே காலங்கழித்தனர்.

ஆனால் பெரிய தம்பிரிம் இலே தாரும் சின்னமலை கீறிய கோட்டைத் தாண்டினதில்லை. அவனது விருப்பங்களை நிறைவேற்றும இயந்திரங்களாக மாறியிருந்தனர். வேறு வேறு உடல்களானாலும் ஒரே உயிர்தான் என்று ஊரார் அவர்கள் ஒற்றுமையை பாராட்டியது வெறும் புகழ்ச்சி மொழியல்ல. உண்மை படப்பிடிப்பாகவே இருந்தது.

ஒரு சமயம் சின்னமலை அதிக நேரம் காவிரி ஆற்றில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்ததால் காய்ச்சல் கண்டான். வழக்கம் போல் 'என்ன செய்து விடும்' என்று அலட்சியமாக இருந்தான் ஆனால் காய்ச்சல் அவனை விடுவதாயில்லை. இருபது நாள் படுத்த படுக்கையாக்கி விட்டது. அந்த இருபது நாட்களும் இரவு, பகல் பாராது, கண்துஞ்சாது, உணவு எடுத்துக் கொள்ளாமல், தாயை விட பரிவான தம்பிமார்களின் அன்பை சின்னமலை நினைக்கும் போதெல்லாம் அவனையறியாமலே புளகாங்கிதம்அடைந்தான். இந்த தம்பிமார்கள் இருக்கும் போது எந்த படைக்கும் அஞ்ச வேண்டியதில்லை என்று இறுமாப்புக் கொண்டிருந்தான்

K.A.மதியழகன்

சின்னமலையைக் குறித்து கொஞ்சம் தரக்குறைவாகப் பேசிய பொறுப்பில்லாத இருவர் பெரிய தம்பியிடம் மாட்டிக்கொண்டனர். அவர்களுக்கு அவன் நடத்திக் காட்டிய தண்டனை வாழ்நாள் முழுதும் மறந்திருக்க மாட்டார்கள். "யாகாவராயினும் நாகாக்க" என்ற குறளின பெருமை, பெரியதம்பியால் ஒருபடி உயர்ந்தது. இவைகளெல்லாம் சின்னமலையின் மனத்திரையில் ஓடியபோது அவனுக்கு குழப்பமாயிருந்தது.

"பெரியதம்பி, அப்படி பிடிவாதமாகச் சொல்வான் என்று நான் கருதவேயில்லை. எவ்வளவு வாஞ்சையுடன் கூறினேன். கொஞ்சம்கூட மரியாதைஇல்லை. இவ்வளவு நாள் என்னிடம் காட்டிய பரிவெல்லாம் வெறும் வேஷம்! ஓலை அனுப்பி இருக்கிறன். ஏதாவது நொண்டிச் சமாதானம் இருக்கும். என்னுடைய நொந்த உள்ளத்திற்கு மருந்து கிடைக்கவா போகிறது?" என்று தனக்தானேபேசிக்கொண்டான். இருந்தாலும் ஓலையை படித்துத்தான் விடுவோமே என்ற ஆவல் உள்ளத்தில்எங்கோ ஒரு இடத்திலிருந்து தூண்டியது. விளக்கைதூண்டினான். ஓலையை படிக்க ஆரம்பித்தான்.

"அன்புநிறைந்த அண்ணனே! பிழை பொறுக்கவேண்டும். தந்தையினும் மேலானவர் நீங்கள், உங்கள் சிறு சொல்லிற்கு விரோதமாக நடந்தவனல்ல, நான். கண்ணீர் [illegible]டித்துக் கொண்டுள்ளேன். அருள்கூர்[illegible] மன்னியுங்கள், அண்[illegible]!

தமையனும் தம்பியும் தர்க்கிக்கக்கூடிய விஷயமுமல்ல. ஒரு தையலிடம் என் மனதை பறிகொடுத்து விட்டேன், அண்ணு.

"தம்பி! பழனிமலைமீது ஒரு கண் வை. உன் பக்தி பெருக வேண்டுமென்பதற்கல்ல, இப்போதெல்லாம் நம்பக்கத்து மக்களுக்கு முருகபக்தி அதிகமாகி விட்டது. கொங்குநாட்டு வேளாள வாலிபர்கள் கும்பல் கும்பலாக கூடுகிறர்கள். அவர்களை தேச பக்திக் கொள்ளச் செய்ய, நம் வரிசையில் சேர்க்க சந்திப்பதற்கு அருமையான இடம். சந்தர்ப்பங்களைதேடிப் பெறவேண்டும். சந்தர்ப்பங்கள் நமக்காக ஓடிவராது. கார்த்திகை தீபம், மார்கழி ஆதிரை, தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், அக்கினி நட்சத்திரம் — எதையும் விட்டு விடாதே! ஆண்டு முழுதும் கிரி சுற்றுபவர்களும், மலைமீது ஏறி இறங்குபவர்களும்இருக்கிறர்கள். குமரவேலரின் அருளை நினைந்து அவர்கள் அங்கே மொய்க்கிறர்கள். நீ போய் வருவதால் கொங்குநாட்டு குமர வேலர்கள் சிலராவது நிச்சயம் கிடைப்பார்கள்" என்று சொல்லி வைத்தீர்கள்.

கடந்த கார்த்திகை தீபத்தன்று பழனிக்குக் கிளம்பினேன்புறப்படும்போதேஇருட்டி விட்டது. தாராபுரம் அருகே அமராவதிக்கரையில் சென்றுகொண்டிருந்த நான் வழிதவறி கொழுமம் போய் சேர்ந்து விட்டேன். பிறகு திரும்பி பழனியை நோக்கினேன். நான் பழனியைச் சேரும்போது அர்த்தஜாமபூசைக்கு அரைநாழிகைதான் இருந்தது. ஊர் முழுவதும் ஒளி மண்டலமாய் காட்சியளித்தது, வானத்து நட்சத்திரங்களெல்லாம் பூலோகத்திற்கு வந்து பழனி உப்பரிகைகளில் வாசம் செய்யஆரம்பித்து விட்டதோ என்ற சந்தேகம் எழுந்தது. எல்லா வீட்டுமாடங்களிலும், கூடங்களிலும் சர விளககு வரிசை ஜகஜ்ஜோதியாய் மின்னின. பல வீட்டுத் திண்ணைகளிலும் வாயிற்படிகளிலும் தீபம் மினுக் மினுக்கென எரிந்துக்கொண்டிருந்தது. வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் தூங்கியும் அவை தூங்கவில்லை.

கோவில் மணியடித்தது. அர்த்தஜாமபூஜை ஆரம்பமாகி விட்டது என்று புரிந்துக் கொண்டேன். அந்த நள்ளிரவிலும் முருக தரிசனத்திற்காக மலையுச்சியிலே பக்தர்கள் பரவசத்துடன் காத்துக்கிடந்தனர். திருவாவினன் குடியிலுள்ள வேளாளர் மடத்தை நோக்கி குதிரை விரைந்துகொண்டிருந்தது. என் கண்களில் நித்திரையும் உடலில் அயர்வும் நெளிந்தன. எப்போது போய் ஓய்வெடுப்போம் என்று இருந்தது.

வேளாளர்மடத்தின் மாடிச் சுவர்முழுவதும் வரிசை வரிசையாகசுட்டிகள்எரிந்தன, அந்தவரிசைக்கு தலைமை வகிப்பதுபோல் ஆயிரம் சூரிய பிரகாசத்துடன் ஒரு எழில் மங்கை அங்கிருந்து தெருவை நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் கண்களின் ஒளி அதிக சுடரா, மேனியின் பளபளப்பு அதிக ஜொலிப்பா, கார்த்திகை தீபத்தின் ஒளி நாக்குகள் அதிக வெளிச்சமா என்று வித்தியாசம் சொல்ல முடியாதபடி ஒன்றையொன்று போட்டியிட்டன.

ஒரு கண நேரத்தில் கண்ட காட்சிகளை இபபடி நான் விரித்துக் கூறிக் கொண்டுள்ளேன். மடத்தைத்தாண்டி அடுத்தவாயிலில் குதிரையைக் கட்டுவதற்காக திரும்பிவிட்டேன்.

"அய்யோ! அப்பா!" என்ற கூச்சல் கேட்டு திடுக்கிட்டேன். அந்த எழிலரசி நின்றுக்கொண்டிருந்த திசையிலிருந்து குரல் வந்திருந்தது. அந்தப் பெண்ணின் சேலை, பற்றி எரிந்துக் கொண்டிருந்தது. அவளுக்கு மேலே தீப் பிழம்பு பறந்துக் கொண்டிருந்தது. மறு விநாடி அந்த மாடி மீதிருந்தேன்.

[தொடரும்]

திருமணம்

★ காண்டேகர் ★

‘எங்கே போவேன், அரசே? ஈவிரக்கமற்ற இவ்வுலகிலே நான் தன்னந்தனியனாக எங்கே போவேன்? பார்க்குமிடமெங்கும் இருளையேகாண்கிறேன். புது மனிதர்களும், வேற்று முகங்களும் பரிவில்லா உள்ளமும் நிரம்பிய உலகிலே எப்படி வாழ்வேன்?’

ராஜகவி டென்னிஸன் எழுதிய ‘மார்ட் டி ஆர்தர்’ என்ற அழகிய காவியத்தில், ஸர் பெடிவியருடைய இந்தப் பேச்சைப் பிள்ளைகளுக்குப பாடஞ் சொன்னபோது என் உள்ளம்கலங்கியது. வீர மன்னனுன ஆர்தரின் ஒப்பற்றப் படைத்தலைவன் இப்படிப் புலம்புகிறுன். ‘பூமியைத் தோண்டுமிடமெல்லாம் நீரூற்றைப் பொங்கச் செய்வேன்’ என்று முன்பெல்லாம் வீரம் பேசிய அவனுடைய மனம். இப்போது மன்னனை விட்டுப் பிரியப்போகிறேம் என்ற எண்ணத்தினுல் வெண்ணெயாக உருகிவிட்டது. ‘எங்கே போவேன், அரசே? இந்தப் பரந்த உலகில் நான் எங்கே போவேன்?’ என்று பரிதாபமாகப் புலம்பிய அந்தப்போர்த் தலைவன், தந்தை மரணப்படுக்கையில் கிடக்கும்போது அவரைத் துயரத்தோடு அணைத்துக்கொள்ளும் பேதைப்பாலகனுக என் கண்ணுக்குத்தோன்றினுன். உண்மையில் அவனுக்குஎன்னகுறை இருந்தது? அவனுடைய வீரவாளின் முன்னுல் சிங்கம் பசுவாகிவிடும்; குபேரன் நவநிதியையும் அள்ளிக் கொடிப்பான். ஆனுல் ஆர்தரைப் போன்ற வள்ளல் இல்லாத உலகம் நண்பர்கள் இல்லாத உலகம் அவனுக்கு இடுகாடாகத் தோன்றியது.

ஒரு பெருவீரனுடைய நிலையே இது என்றுல் நீண்ட காலப் பிரிவின்போது பெண் உள்ளம் எப்படித் தவிக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். சிறு குழந்தையிலிருந்து தன்னை அன்போடு வளர்த்துப் பெரியவளாக்கிய தந்தையை விட்டுப் பிரியும்போதும், உயிரைத் திரணமாக மதித்துத் தன் வாழ்வெனும் கொடியைத்தளிரவைத்த தாயினிடம் விடை பெறும்போதும் ஒரு பெண் என்ன நினைப்பாள்? திருமணம் என்பது பெண்ணைப் பொறுத்தவரைக்கும்மறுபிறப்புத்தான். சாவுக்குப் பிறகு நேரும் மறு பிறப்பில் முந்திய பிறப்பின் ஞாபக்மாவது இல்லாதிருக்கிறது; ஆனுல் இந்த மறு பிறப்பிலோ, அடிக்கடி இரண்டு ஜன்மங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் காட்சிகளே நிறைந்திருக்கின்றன, ஆர்தரைபபோன்ற வள்ளல் இல்லாதபோது ஒரு வீரத் தலைவனுக்கே தன் உயிர் பாரமாக இருந்ததென்றுல், புது மணப்பெண்ணுக்குத் தன் பெற்றேரை விட்டுப் பிரிந்திருக்கும் ஆற்றல் எங்கிருந்து வரும்? பதினைந்து ஆண்டுகள் தாய்வீட்டில் வளர்ந்தபாசம் அம்மிமிதித்தமாத்திரத்திலே போய்விடாது; துடிக்கும் உள்ளத்துக்குத் தாலி முடிச்சினலேயே ஆறுதல் ஏற்பட்டு விடாது.

காட்டிலிருந்து பிடித்து வந்த கிளியைக் கூண்டில் அடைத்தால் அது நான்கு நாளைக்கு மாதுளங்கனியைத் தலையெடுத்துப் பார்ப்பதில்லை. விலைக்குவாங்கிய மாடு. தும்பு விடுபட்டதுமே தன் பழைய வீட்டுக்கு ஓடுகிறது. சொந்த ஊரைவிட்டு வேற்றூருக்குப் படிக்கப்போன பையன் தன் வீட்டைப்பற்றிய கனவு காண்கிறுன். கூபர் என்ற கவி ஒரு கிளியைப்பற்றி உருக்கமான கதை எழுதியிருக்கிறுர். வேற்று நாட்டில் தன் ஊர் சொற்கள் காதில் விழுந்ததுமே அந்தக்கிளிக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகி, அந்த மகிழ்ச்சிப் பெருக்கிலே அது உயிரை விடுகின்றது. வீடு, பிறந்த ஊர், சுற்றம் ஆகியவற்றில் மாந்தருக்குள்ள பற்று மிகவும் பெரியது.

இந்தப் பற்றுக்களை எல்லாம் விட்டு, புதுமணப்பெண் ஒரேயடியாக வேறுபட்ட சூழ்நிலையோடு ஒன்ற வேண்டியிருக்கிறது. ஓர் அதிகாரியினிடமோ முதலாளியினிடமோ இருந்து வேலைசெய்யும் சிரமத்தை அறிந்தவர்களுக்குத்தான், முதல்தடவையாகப் புக்ககத்துப் போகும் பெண்ணின் மனநிலை புரியும். ஆறு கடலில் கலக்கத்தான் பிறக்கிறது என்பது உண்மையானுலும், தொலைவிலிருந்து இடி முழக்கம் கேட்டதும், மலைச்சிகரத்திலுள்ள தன்வீட்டுப்பறவைகளின் இனியகீதம் அதற்கு ஞாபகம் வராமல் இருக்குமா? அரும்பை எடுத்துப்போய் ஆண்டவனுக்கு அர்ப்பித்தாலும், வைகறைக் காற்றின் இனிய ஸ்பரிசத்தையோ, வெயிலின் மென்னகையையோ நினைத்து அது பூரிப்பது இயல்புதான்.

இப்படிப் பார்த்தால் தாய் வீட்டைவிட்டுப் பிரிவது மிகவும் உருககமான காட்சியாகவே தோன்றுகிறது. இந்தப் பிரிவைத் தாங்கும் துணிச்சல், மலரினும் மெல்லிய பெண் உள்ளத்துகவு எங்கிருந்து வருகிறது? ஸர் பெடிவியருக்கு ஆர்தர் தந்த பதிலிலே இந்தக் கேள்விக்கும விடை இருக்கிறது. புதுமைக்கு இடம் கொடுத்துப் பழைய முறை மாறுகிறது என்கிறுன் ஆர்தர்.

‘கணவனே தெய்வம் என்ற சூத்திரத்தை நாம் கவனிக்காமலே இருந்தாலுங்கூட, திருமணம் என்பது ஒரு புது வாழ்க்கை என்று திட்டமாகச் சொல்லலாம், பழமையைப் புதுமை கைப்பற்றுவதுதான் இயற்கையான முறை. இன்றைய மலர்கள் நாளைக்கு நிர்மால்யமாகின்றன. ஆனுல் அந்த வாடலைத் தூக்கி எறியும்போது நம்மனம் துளியும் வருந்துவதில்லை. நிர்மால்யத்தை மலராக எண்ணும் மோகம் மனிதனுக்கு உண்டாகிவிட்டால், ஆண்டவன் செத்தையையும் குப்பையையுமே வழிபாட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். இறந்த காலத்தைவிட எதிர் காலத்தை நோக்குவதிலேயே மனிதனுக்கு அதிக ஆசை. ஆர்தர் போவதைக்கண்டு ஸர் பெடிவியர் கண்வீங்க அழுததற்குக் காரணம், அவன்பொற்காலமான கடந்த காலத்தையேக்கண்டமைதான். புக்ககம் போகும் மணப்பெண் ஒரு நாளும் அவனைப்போலவருந்துவதில்லை. ஏனென்றுல், தான் பெருமையாக வாழப்போகும் எதிர்காலம் அவள் கண் முன்னுல் நிற்கிறது. படிப்புக்காக பெற்றேரைவிட்டு வேற்று நாட்டில் வாழும் பையனும், திருமணமானதும் கணவன் வீட்டுக்குப்போக மகிழ்ச்சியோடு துள்ளும் பெண்ணும் பிரிவைப் பாராட்டாமைக்கு ரகசியக் காரணம் இதுதான். ‘புதுமைக்கு இடம் தந்து பழைய முறை மாறுகிறது.’ என்று ஆர்தர் கூறியதுதான் சரி.

வருந்துகிறோம்

ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜபாகவதர் காலமானுர் என்ற சேதிகேட்டு மிக வருந்துகிறேம். எம். கே. தியாகராஜ பாகவதரின் இனிய குரலும் அவர் பெருக்கிய கான வெள்ளமும் தமிழர்சமுதாயம் என்றென்றும் மறக்கமுடியாத அற்புத செல்வங்கள். அதனை இழந்து தவித்திடும் அவரது சகோதரர்களுக்கும், குடும்பத்தாருக்கும், தமிழ் மக்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

இலங்கை எதிர்க்கட்சி உறுப்பினரின் வீண் குற்றச்சாட்டுக்குப் பொதுச்செயலாளர் மறுப்பு

★

இலங்கைப்பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சி உறுப்பினரான திரு. பண்டாரநாயகா என்பவர், இலங்கை முதலமைச்சராயிருந்த பண்டாரநாயகாவின் கொலைச் சதிக்குத் தென்னக திராவிட முன்னேற்றக் கழகமும் உடந்தையாக இருந்ததாகக் குறிப்பிட்டுப் பேசியிருக்கும் கூற்றைச் செய்தித் தாள்களில் படித்துத் திடுக்கிட்டுப் போனேன். அந்த கூற்று உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட, முழுப் பொறுப்போடு மறுக்கத்தக்க, வன்மையாகக் கண்டிக்கத் தக்க நடுநிலையாளராலும் நல்லறிவு படைத்தோராலும் வெறுக்கத் தக்க, கற்பனை செய்யப்பட்ட வீண்பழியாகும். பொருப்புவாய்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு கூற்றை எப்றடிக் கூறத் துணிந்தார் என்பதுதான் வியப்புக்குரியதாக இருக்கிறது.

கருத்து வேற்றுமையைக் கத்தி முனையாலோ அல்லது துப்பாக்கிக் குண்டாலோ தீர்த்துக் கொள்ளும் இழிசெயலை, ‘அருவருத் தொதுக்கத் தக்க காட்டு மிராண்டியின் கயமைசெயல்’ என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் படுகொலை ஏற்படும் போதேல்லாம் கூறி வருகிறது. தி. மு. கழகம், அறவழியில நின்றுசெயலாற்றி வருவதிலேதான் தன் கருத்தினைச் செலுத்திவருகிறது.

இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைவாழ் தமிழர்களிடையேயும், தென்னகத்திலிருந்து இலங்கைக்குச் சென்றுள்ள தமிழர்களிடையேயும் நல்லுறவு ஏற்படவும், அவர்களின் நல்வாழ்வு தழைக்கவும், அவர்களிடையே பகுத்தறிவு நெறி பரவவும் ஆன அரும் பணிகளைப் புரியும் ஒரு பண்பாட்டு அமைப்பாகத்தான் இருந்து வருகிறது. தென்னக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பண்பாட்டுத் தொடர்பைத் தவிர வேறு அரசியல் தொடர்பு எதுவுமில்லை. மேலும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை அரசியலில் ஈடுபடுவதில்லை. இத்தகைய சூழ்நிலைகளின் அடிப்படையில் இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினரின் கூற்று மறுத்தொதுக்கத்தக்கது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி மு கழகம்

அந்த நவம்பர் ஏழு !

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பா உத்தியோகம் கிடைத்தாலே போதும்'' என்றுள்.

மரம், செடி. கொடி பற்றிய தாவரக் கலையில் மகன் அக்கரைக் கொண்டுள்ளான, பெரும் போராசிரியராவான் என்று கேட்டபோது அன்னையின் அகம் மகிழ்ந்தது.

சின்னுட்களில் செடி, கொடி மலர் ஆகியவற்றை ஒடித்தும் மடக்கியும், கசக்கியும் கொண்டிருந்த கரங்களில் நாட்டு வெடி குண்டுகள் தயாரிக்கும் புரட்சி வீரனுனுன். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் மாணவர் குழுவிற்கு தலைவனுனுன். ''நாத்னுயா வால்யா'' என்ற பயங்கர இயக்கத்தின் அங்கத்தினுனுன். அவனது அறையில் சார் மன்னன் மூன்ரும் அலக்சாண்டரைக் கொலைசெய்ய சதித் திட்டம் உருவாகியது.

சார் கொலை செய்யப்பட்டவுடன் பரபரப்புடன் வெளியிட வேண்டிய அறிக்கையைக் கூட இந்த இள வயதினர் தயாரித்து விட்டனர்.

''இரஷ்யாவின் விடுதலை உணாவு மக்கி மடிந்துவிடவில்லை, இரஷ்ய மைந்தர்களின் இதயத்தில் உண்மை ஒளி அவிந்துவிடவில்லை. 1887-ம் ஆண்டு.................. மாதம் ....கிழமை சார் மன்னன் கொலை செய்யப்பட்டான்'' என்ற நகல் அவர்களிடம் இருந்தது.

சார் மன்னன் வசந்த மாளிகைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமானுன். ஐசாக் தேவராலயத்தின் முன்னுள்ள மைதானத்தில் கொலைகாரர்கள் நிறுத்தப்பட்டனர், மாலை நேரம், மந்தார வேளையும் மறைந்தது. நெடிய இரவு தான் வந்தது. சார் மன்னனின் சாரட்டு வண்டியைக் காணும், மீண்டும் ஒருநாள் கொலைகாரர்கள் நின்றனர். கோமகன் வரக்காணும் சில மணி நேரத்தில் காரணம் புரிந்தது.

ரகசியப் போலீசார் சதியை கண்டுபிடித்து விட்டார்கள். சார் மன்னனை, மாரிக்காலத்து அரண்மனையைவிட்டு நகரக்கூடாது என்று எச்சரித்துவிட்டார்கள். அலக்சாண்டரின் நண்பர்கள் சிலர் போலிசாரிடம் அகப்பட்டனர். இவனும் பிடிபட்டான். அலக்சாண்டரிடமிருந்த குறிப்பு ஏட்டில் சதிக் குற்றத்திற்கான ஆதாரங்கள் இருந்தன.

அலக்சாண்டர் உட்பட பதினைந்து பேர்மீது சதி வழக்கு தொடர்ந்தனர்.

* * *

அலக்சாண்ரோவ்னு நகரம் வந்து சேர்ந்தார்கள், பல மாதங்கள் மகனைக் காண துடித்தார். அனுமதி வழங்கப்படவில்லை, கடைசியாக மகனைக் கண்டாள்.

அம்மா! என்று கட்டிக்கொண்டு அழுதான், என்னை மன்னித்து விடுங்கள் என்று கதறினுன். இந்த காட்சியைக் கண்டகாவலாளிகள், இவ்வளவு கனிவானவனு அந்த கொடும் செயலுக்கு உடந்தையானுன் என ஆச்சரியத்தில் மூழ்கினர்.

''மகனே! உனக்கேனடா இந்த கெடு நினைப்பு. காலில் விழுந்து கேட்டுக்கொள்கிறேன். இவைகளிலே ஈடுபடுவதில்லை என்று ஒரு வார்த்தை சொல். உன்னை விட்டு விடுவார்கள்'' என்று எவ்வளவோ கெஞ்சினுள்.

''அம்மா! என்னைத் தடுக்காதீர்கள்! நமது விடுதலைக்கு இது தானம்மா மார்க்கம்''

''நன்ருயிருக்கிறது வேறு வழியே கிடையாதா?''

''கிடையாதம்மா! கிடையாது என்னை மன்னித்து விடுங்கள்''

வழக்கு நடைபெற்றது. நண்பர்கள் பலர் தப்பாதானே குற்றவாளி எனஒத்துக் கொண்டான்.

''வாக்கு மூலத்தின் துயரம் நிறைந்த ரஷ்ய மக்களின் விடுதலைக் கிளர்ச்சிக்கு துணைபுரிவது என் தூயநோக்கம். பேச்சுரிமை, எழுத்துரிமை, செயலுரிமை அற்ற ஓர் எதேச்சாதிகாரத்தை பணிய வைக்க இருக்கும் ஒரே வழி பலாத்காரம். அநீதியைக் ஏகாதிப்பவர் பலாத் காரத்தை பயன் படுத்தியேஆகவேண்டும். அதனுல் அவர்கள் அழியலாம் ஆனுல் கொடுங்கோன்மை ஒழியும். மக்கள் புதுவாழ்வு பெறுவார்'' என்று கூறி கூச்சவிட்டான்.

அலக்சாண்டர் உலியனுவ்விற்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அன்னை அழுதழுது ஓய்ந்தாள். கருணை மனு கொடுத்தால் மன்னிப்புக் கிடைக்கும் என்று மன்ருடிக் கேட்டாள். அப்படி அவன் தோழர்கள் பலர் விடுதலை பெற்றனர். அவள் பிள்ளை அந்த பட்டியலிலே சேரவில்லை. பிடிவாதமாக மறுத்து விட்டான்.

1887-ஆம் ஆண்டு மேதிங்கள் எட்டாம் நாள் வைகறை வேளையில் ஸ்லுசல்பர் கோட்டை முற்றத்தில் அலக்சாண்டரும் அவனது நண்பர்கள் நால்வரும் தூக்கிலிடப் பட்டனர்.

அண்ணன் தூக்கில் தொங்கிய சேதியை ஏந்திய பத்திரிகை தொலை தூரத்திலே இருந்தே ஊரிலுள்ள தம்பிக்கு கிடைத்தது' பத்திரிகையை கசக்கினுன். நறநறவென பல்லைக் கடித்தான். அவன் பார்வையில் பயங்கர பழியுணர்வு நிழலிட்டது.

''இதற்கு தகுந்த விலை, என்னிடம் கொடுத்தேயாக வேணடும். அவர்களை நான் விடப் போவதில்லை. இது உறுதி! என்று கர்ஜித்தான்.

''யார் உன்னிடம் விலை கொடுத்தாக வேண்டும்!'' என்ருர் அருகிலிருந்த அம்மையார்:

''யார் என்பது எனக்குத் தெரியும்'' என்ருன் அந்த இளைஞன்.

அவன்தான் லெனின்ஆனுன்! அன்று அவன்பெயர் விளாடிமிர் உலியனுவ்.

அண்ணனின் தியாகம் அவனது இளம் உள்ளத்தில் ஆழப் பதிந்தது.

அதே ஆண்டில், அரசியல் ஆர்ப்பாட்டத்தில்கலந்து கொண்டதற்காக கசான் பல்கலைக் கழகத்திலிருந்து விலக்கப்பட்டான்.

விளாடிமிர் என்ற இந்த வால்காநதி தீரத்து வாலிபனின் சிந்தனை வேலை செய்ய ஆரம்பித்தது. சாரின் கொட்டத்தை ஒழிக்க அண்ணனின் முயற்சி மட்டும் சரியானதல்ல என்று பட்டது, விடை தேடினுன். மார்க்ஸ் சித்தாந்தம் அவனைக் கவர்ந்தது. தனி முயற்சி பாலைவனத்தில் இறைத்த பனிக்கட்டி, மக்கள்சக்தியின் மாண்பால் விடுதலை மலர வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

இருபத்தைந்து ஆண்டுகள் அவனது ஓயாத பணி நடைபெற்றது. அடக்குமுறை, தேசப் பிரஷ்டம், கண்காணு வாழ்வு, பகைமை, அலட்சியம், சார்ச் சர்க்காரின் கணைகள், அரண்

இளைப்பாறு மண்டபங்கள் இன்னுரின் ''உபயம்''

''புதுமதியன்''

கொலைகாரப் பாவிகளும் கொடுமைசெய்த
கொடியவரும் செல்வத்தைச் செலவுசெய்தே
சிலையடித்து வைப்பார்கள்! திருடர்! வஞ்சகர்!
சிந்தையிலே நல்லெண்ணம் சிறிதுமில்லார்
விலைகொடுத்துக் கடவுளரின் அருளைப்பெற்று
விடலாமென்று எண்ணிடுவார்; பணம் இறைத்
அலைகடலின் முத்தாலே பல்லக்கு; இன்னும் [தே
அழகுதரும் பொன்னுலே தேரும் செய்வார்!

களைப்பாறத் தன்னுடைய பெற்றதாய்க்கும்
கஞ்சிதரா வஞ்சரெலாம் படிகள்தோறும்
இளைப்பாறு மண்டபங்கள் எடுத்து வைத்து
இன்னுரின் 'உபய'மென எழுதிவைப்ப
விளைப்போருக் கீயாமல் நிலத்தை எல்லாம்
வேடமிடும் மடத்தாண்டிக்கெழுதி, அன்னர்
சளைக்காது உண்டிருந்து பெண்டிரோடு
சலலாபஞ் செய்திருக்க மடமெடுப்பார்!

கற்பழித்தோர் கன்னியரை; மனைவி என்னும்
காதலியை தாய்வீடு துரத்திவிட்ட
அற்பர்களும், ஏமாற்றுவோரும் தங்கள்
அநியாயச் செயலெல்லாம் மறைக்க வேண்டிப்
பெற்ருேரின் மீதுமணி பதித்துவைப்பார்!
பொய்க்கணக்குச் சோடித்துக் கள்ளச்சந்தை
விற்பனையில் கிடைத்திட்ட கொள்ளை எல்லாம்
விகிதமுறைப் படியாகக் கடவுட்கீவார்!!

பட்டியலைக் காட்டியவர் முன்னிருக்கும்
பாமரனை ஏய்திடுவார்; துட்டுக்கெட்டு
வட்டிதர வேண்டுமென வாட்டி, வந்த
வரவுதனைப் பெருநிதியைக் கடவுள் உண்டிப்
பெட்டியிலே கொட்டிடுவார்! ஐயோ! இந்தப்
பேயரெலாம் திருந்துவது என்ருே? என்ருே?
கட்டிடத்துக் கருங்கல்லில் கடவுளுண்டோ?
கனிவுதரும் அன்புளத்துக்கடவுள் காண்பீர்!

உள்ளத்தைக் கடந்தவரே கடவுள் என்பார்
உணர்ந்திடுவீர்! இனியேனும் உள்ளத்துள்ள
கள்ளத்தை அகற்றிடுவீர்!; கடவுள் என்றும்
காணுத, அடையாத, கருத்துப்பிண்டம்!
பள்ளத்துப் பாய்நீரின் தெளிவை எல்லாம்
பாய்ச்சிடுவீர் உள்ளத்தில்! மூடத்தன்மைப்
பள்ளத்தில் வீழாமல் நிற்பீர்! என்றும்
பகுத்தறிவுச் சுடர்வீசும் வாழ்க்கை காண்பீர்!!

....................................விளைவு காண்போம்
பயிருக்கு நீர்விட்டால்! சிலையாய் நின்ற
பாறைக்கு நீர்விட்டால் என்ன காண்போம்?
வயிறுவளர்க்கின்றதொரு கும்பலுக்கு
வழங்குவது கடவுளுக்கா? எண்ணிப் பாரீர்!

மனைக் கட்டியக் காரர்களின்வன் செயல், பூர்ஷுவா'க்களின் கோபக்கனல், மிராசுதாரர்களின் மிரட்டல், வெளிநாட்டார் ஆயுதப் படையெடுப்பு, ஆயிரம் நாக்குடைய பத்திரிகையாளரின் இழிமொழி பழிச்சொல் — இத்தனையும் தேள் கடிபோல கொட்டின.

1917–ஆம் ஆண்டு நவம்பர் 7. அந்த நாள் அவனியுள்ளவும் அழியாத நாள். எத்தனையோ நவம்பர் 7. வந்து போயிருக்கிறது. பிறகும் வந்து கொண்டிருக்கிறது. ஆனுல் 1917 – ஆம் ஆண்டு நவம்பர் 7ந் தேதி பெற்ற பெருமை வேறு 7ந் தேதிகளுக்கு நிச்சயமாக இல்லை.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக பாட்டாளி தாங்கமுடியாத வேதனையில் உழன்று கொண்டேயுள்ளான். இன்னல் கடல் தனிலே சிறகில்லாபட்சி போல் நீந்திக் கொண்டுள்ளான். ஆண்டான் – அடிமை மிராசுதாரர் – உழவன், முதலாளி — தொழிலாளி–இந்த வரிசையை தளமாகக்கொண்டே யுகயுகமாக சமுதாய கட்டுக் கோப்பு அமைக்கப் பட்டுள்ளது.

தலைமுறை தலைமுறையாக உழைக்கும் கூட்டம், தங்கள்மீது பூட்டப்பட்டிருக்கும் அடிமை விலங்குகளை உடைத்தெரிய பல நூறு முறைகள் முயன்றனர். ஆனுல் தோல்வியும் அவமானமும் அவர்களைச் சூழ்ந்தது. ஒவ்வோர் தடவையும் பின் வாங்கினர். ஆனுல் அவர்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் கோபமும் ஆத்திரமும் பழி உணர்வும் பதுங்கி யிருந்தன, விலங்குகள் உடையும் என்று நம்பினர். பல நேரங்களில் புதிய பொன் விலங்குகள் மாட்டப்பட்டன.

ஒடுக்கப்பட்டவனும், அடக்கப்பட்டவனும் தலைநிமிர்ந்து உலகம் உழைப்பாளிகளுடையது. பிறர் உழைப்பைஉறிஞ்சும் உன்மத்தர்களுக்கல்ல என்பதைஉரக்கக் கூறி அதிகாரத்தை தட்டிப் பறித்த நாள் 1917 நவம்பர் 7. வரலாறு அதற்குமுன் அப்படிப்பட்ட சம்பவத்தை சந்தித்ததில்லை. அந்த சம்பவத்தின் தலைவர் லெனின்.

எங்கிருந்தோ வந்தான், எங்கள் இதயந்தனில் இடம்கொண்டான் என்று கோடிக்கணக்கான குடும்பங்கள் வாழ்த்தின. இன்றும் வாழ்த்துகின்றன. தற்காலிக சர்க்கார் மாரிக்கால அரண்மனையில் சரண்புகுந்தது. போர் வீரரும் மாலுமிகளும நவா துறைமுகத்தில் நின்ற அரோரா கப்பலிலிருந்து தாக்கினர். பீட்ரோகிராடின் தந்தி, தபால் ரயில் போக்குவரத்து நிறுவனங்களையும் பாங்குகளையும் அரசாங்க காரியாலயங்களையும் விடுதலைப்படையினர் கைப்பற்றினர். சோவியத் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டது என்ற புல்லரிக்கும் சேதியினை வழங்கியது அந்த நவம்பர் ஏழு!

அதுநாள்வரை ஆசைகளை மறைத்துக்கொண்டிருந்த பாட்டாளிவர்க்கம் நம்பிக்கை நட்சத்திரம் தென்பட்டது என்று எக்களித்தனர். இனி முதலாளித்துவம் சாகும், தொழிலாளியின் போராட்டம் ஒரு தொடர்கதை என்று தெரிந்துக்கொண்டது. அந்த பெரும் நம்பிக்கையை ஊட்டிய மாவீரன் லெனினையும் நவம்பர் 7–ம் தேதி பிரித்துப் ப்ார்க்க முடியாது. லெனினின் வாழ்வும் அவர் காட்டிய வழியும் வரலாற்றில் ஓர் புதிய திருப்பத்தை உண்டுபண்ணியது.

லெனின் தொடுத்த கணை முதலாளித்துவ காண்டாமிருகத்தின் வயிற்றில்குத்தியது. அன்று முதல் அது பிழைக்கவேயில்லை,

நாற்பத்து இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. லெனின் வாழ்வாலும் வழியாலும் உருவாக்கிய சோவியத்நாடு கொத்தளிக்கும் கடலுக்கு மத்தியில் நிற்கும் கற்பறைபோல் நின்றிருக்கிறது. எத்தனையோ அலைகள் அதனை அழிக்க, அடித்தது மோதின, அது கரையவுமில்லை.

அதுவோர் நம்பிக்கைத் தூண் கலங்கரைவிளக்கம்என்றதுநானிலம், புதியதத்துவத்திற்கு செயலுருவம் தந்த சிற்பி லெனினை நன்றியுடன் நோக்குகிறது. நவம்பர் ஏழாந்தேதியை நினைத்து கொள்கிறது. நவம்பர் ஏழு நடைபெருத இடங்களில் அந்த நாள், எந்த நாளோ என்று ஏங்குகிறது.

அடக்குமுறையாளர்களே!

அனுபவ மொழி கேளீர்!!

திருவிதாங்கூர் திவானுயிருந்த சர். சி. பி: ராமசாமி ஐயர் அவர்கள் தமது எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 1-11-59ந் தேதி 'கல்கி' இதழில் தீட்டியுள்ள "என் நினைவுகள்" என்ற கட்டுரையில், தாம் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது ஏவிய அடக்கு முறைகளுக்கு வருந்தும் வாசகங்களை கீழே வெளியிட்டுள்ளோம், புதிய அடக்குமுறையாளர் இந்த அனுபவ மொழியில் பெறக் கூடிய பாடம் நிறைய இருக்கிறது என்ற நம்பிக்கையில்.

"சமஸ்தானத்திற்கு உடனடியாகச் சுயாட்சி வழங்க வேண்டுமென்று காங்கிரஸ்காரர்களும் கம்யூனிஸ்ட்களும் கூறினுர்கள். நான் அந்தக் கோரிக்கையில் படிப்படியாக உரிமை வழங்க வேண்டுமென்று அரசினருக்கு எடுத்துக் கூற வேண்டியிருந்தது. இதன் விளைவாக நடந்த போராட்டத்தில் கம்யூனிஸ்ட் பேரிலும், மற்றவர்கள் பேரிலும் நான் வன்மையாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. அச் சம்பவங்களை இன்று பின்னேக்காகப் பார்க்கும்போது அந்த நடவடிக்கையால் வேண்டாத வெறுப்புணர்ச்சியைச் சம்பாதித்ததாகவும் அதிகப்படியான அரசியல் நடவடிக்கையைச்செய்து விட்டதாகவும் நான்இப்போதுஉணர்கிறேன்"

சென்னை காஸினே, மஹாராணி, ராக்ஸி
மற்றும் தென்னுடெங்கும் வெற்றிகரமாக நடைபெறுகிறது.

விமர்சனம்

சரவணு பிலிம்ஸாரின் " பாகப் பிரிவினை "

மலர்கள் ஒரே வகையாகயிருந்தாலும், மாலை கட்டுபவனின் கைத் திறத்தால் மலர் மாலைகள் கவர்ச்சிகரமாக அமைவதுண்டு. சரவணு பிலிம்சார் தயாரித்த பாகப் பிரிவினையின் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணம்.

நமக்குப் பழக்கப்பட்ட கதை— அண்ணனும் தம்பியும் ஒற்றுமையாகவாழ்கின்றகுடும்பம்.மூத்தவருக்குபிள்ளை இல்லை. தம்பிக்கு இரண்டு பையன்கள். மூத்த பையன் இளம்வயதிலேயே மின்சாரம் தாக்கப்பட்டு முடமாகி விடுகிறுன். இளையவன் சென்னைக் கல்லூரியில் படிக்கிறுன். அத்தைமுறைகொண்டாடிசிங்கப்பூரிலிருந்துவந்தஒருவனின்நுழைவிற்குப்பின் கதையில் விருவிருப்பு உண்டாகிறது. ஒற்றுமையாக வாழ்ந்த குடும்பத்தில் பிளவு உண்டாகிறது, அதனைத் தொடர்ந்து பல நெஞ்சுருக்கும் சம்பவங்கள்.

கதையில் எவ்வித புது அம்சங்கள் இல்லை என்றுலும், சம்பவக் கோர்வைகள், காட்சி அமைப்புக்கள், ஆகியவற்றின் துணையால் பாகப் பிரிவினை ஓர் உணர்ச்சிச் சித்திரமாக அமைந்திருக்கிறது.

முடவன் பாத்திரத்தை ஏற்று சிவாஜி கணேசன் நடிக்கிறுர். நடிக்கிறுர் என்பதைவிட பாத்திரத்தோடு ஒன்றி விட்டார் என்றுல் அது வெறும் புகழ்ச்சி உரை அல்ல, உண்மை! அவர் ஏற்று நடிக்கும் குணச்சித்திரம் தான் கதைக்கேஉயிராக அமைந்துள்ளது. கடமையுள்ளம் கொண்ட மகனுக்வும், பற்றும் பாசமும் கொண்ட உடன் பிறப்பாகவும் காட்சிக்குகாட்சி தோன்றுகிறுர். புதுமையானபாத்திரம். அதனை எவ்வித குறையுமின்றி செய்து முடித்திருக்கிறுர்.

தான்நொண்டி, அங்கஹீனன் என்று அறிந்தும், தன்னை மணக்க ஒரு பெண் முன் வருகிறுள். கட்டாயத்தின் பேரில் அல்ல...தன்னிச்சையாக! அழகற்ற பெண்ணு என்றுல் அதுவுமில்லை — அவளோ பார்த்தோர் மயங்கும் பத்தரை மாத்துத் தங்கம்! தித்திக்கும் சேதி கேட்டவுடன் இன்ப மயக்கம்... காரணம் இல்லாத உள்ளத்தவிப்பு! இந்த நிலையை மிக உணர்ச்சியாக தனது முகபாவத்தில் சிவாஜி காட்டுகிறுர், இரண்டு நிமிடங்கள் தான் — அதுஅவரை ஒரு பிறவி நடிகர் என்று அவனிக்கு அறிமுகப்படுத்த தவறவில்லை.

அண்ணனுக டி. எஸ்.பாலையா நடிக்கிறுர். பண்பட்ட நடிகர். ஒவ்வொரு கட்டத்திலும் அநுபவ முத்திரை பளிச்சிடுகிறது.

வேலைக்காரப் பெண்ணுக. பி. சரோஜாதேவி நடத்திருக்கிறுர். ஆரம்பம் முதல் அவரின் நடிப்பில் கிராமீய வாடை பெருமளவில் மணக்கிறது. கண்ணைக் கருதுதைக் கவர்ந்தவன் தான் நாதன் என்பார்கள். அதனை இவர் பொய்ப்பிக்கின்றுர். ஒன்றிய மனம்தான் இரண்டு உள்ளங்களின் இணைப்பிற்கு அடிப்படை என்பதை தனது துணிகரமான செயலால் செய்து காட்டுகின்றுர். அவரின் தியாகவாழ்வு அவர் திரையில் தோன்றும் போதெல்லாம் நமது அநுதாப உணர்வை இதயத்தின் அடித்தளத்தில் ஊசலாடச்செய்கிறது. படம் முடிந்த பின்பு கூட அந்தப் பாத்திரம் நமது நினைவுத் திரையிலிருந்து மறைவதில்லை.

மூன்று பாடல்கள்நன்றுய் உள்ளன. அவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல கவிஞர் கண்ணதாசன் அவர்களால் இயற்றப்பட்டுள்ள "ஏன் பிறந்தாய் மகனே!" என்ற தாலாட்டுப்பாடல் சுவையும் பயனும் நல்கும் வகையில் அமைந்துள்ளது. படம் பார்ப்பவர்களை சில நிமிடங்கள் தங்களையே மறக்கச் செய்து, ஆயிரம் உணர்வுகளை எழச் செய்துவிடுகிறது இப் பாடல். திருவாளர் விசுவநாதன் இராமமூர்த்தி ஆகியோரின் இசையமைப்பு பாடல்களுக்கு மேலும் ஒளியூட்டுகிறது என்றுல் அது மிகையாகாது.

டைரக்டர் பீம்சிங்கின்கைவண்ணத்தைபடம் முழுதிலும் காணுகின்றேம்.

தயாரிப்பாளர் வேலுமணி அவர்களின் முதல்படம் இது. அவரது எதிர்கால வெற்றிக்கு இதுவோர் விடிவெள்ளியாக அமைந்திருக்கிறது, செய்வன திருந்தச் செய்தால், வெற்றி தவிர வேறு விளைவு ஏற்படாது என்பதுதான் படம் பார்த்தபின் நமக்கு ஏற்படும் எண்ணம்.

ELEGANT

அச்சிடுபவர் : கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஓர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும் : கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை-6.